**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 29 June 2016

# தனியார் வீட்டு விலை இறக்கம்

கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்குமாடி வீடுகள், கூட்டுரிமை வீடுகளின் விலைகள் ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மே மாதம் 0.8% வீழ்ச்சியடைந்தன.

சிங்கப்பூர்க் குடியிருப்பு விலை அட்டவணை (SRPI) இந்த விவரங்களைத் தெரிவிக்கிறது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் நிலச் சொத்து ஆய்வுக் கழகம் இந்த அட்டவணையை உருவாக்குகிறது.

ஒட்டுமொத்த விலை ஏப்ரலில் 0.2% கூடியது. இந்த அதிகரிப்பு 0.3%ஆக இருக்கும் என்று முன்னுரைக்கப்பட்டு இருந்தது. மத்திய பகுதியில் அமைந்துள்ள வீடுகளின் விலை, சிறிய வீடுகளை நீக்கிவிட்டுப் பார்க்கையில் 0.5% குறைந்தது. மற்ற பகுதிகளில் இந்த வீழ்ச்சி 1%ஆக இருந்தது. 506 சதுர அடி தரைப்பரப்பைக் கொண்ட சிறிய வீடுகளின் விலை ஏப்ரலுடன் ஒப்பிடுகையில் மே மாதம் 1.1% குறைந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.